# பத்திரிக்கை செய்தி

## வழக்கின் தீர்ப்பு

### காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/AC/2009/KM

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா, போடிநாயடு கண்டிகை கிராமத்தை சேர்ந்த திரு.C.பாபு என்பவர் தனது மாமா திரு.சஙகர், அவர்களுக்கு சொந்தமான திருத்தணி தாலுக்காவிற்கு உட்பட்ட கார்திகேயபுரம் என்கிற கிராமத்தில் சர்வே எண்- 144/ல் அரசு அனுமதி பெற்று கல்குவாரியை நிர்வாகித்து வந்துள்ளார். இந்நிலையில் திருத்தணி வருவாய் கோட்ட அலுவலர் திரு.சந்திரசேகரன் அவர்கள் திரு.சங்கர் என்பவரின் கல்குவாரிக்கு சென்று, அங்கு வேலை பார்க்கும் திரு.பாபுவை லஞ்சமாக தனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் கல்குவாரியை வேறு ஏதாவது காரணம் சொல்லி சீல் வைத்து விடுவதாகவும், கல்குவாரியில் வேலை பார்க்கும் தொழிலாளர்களிடமும் சத்தம் போட்டு வந்துள்ளார். இது சம்மந்தமாக கடந்த 10.08.2009ஆம் தேதி திரு.பாபு அவர்கள் திரு.சந்திரசேகரன் அலுவலகத்தில் சென்று பார்த்த போது தனக்கு லஞ்சமாக ஒரு வாஷிங்மெஷின் வேண்டும் என்று சொன்னதால் ஒனிடா வாஷிங்மெஷின் வாங்கி திரு,சந்திரசேகசன் வீட்டிற்கு டெலிவரி செய்துள்ளார். அதேபோல் திரு.சந்திரசேகரன் என்பவர் அதே கல்குவாரியில் கல் எடுத்து சப்ளை செய்யும் லாரி ஓனர் திரு,ராஜேந்திரன் என்பவரிடமும் பிரிட்ஜ் வாங்கி தர சொன்னதால் அவரும் வாங்கி திரு,சந்திரசேகரன வீட்டிற்கு டெலிவரி செய்துள்ளார். எதிரி திரு,பாபு என்பவரிடம் வாஷிங்மெஷின் சிறியதாக இருப்பதால் லஞ்சப்பணமாக மேலும் ரூ.10,000 கொடு என்று கேட்டார். திரு.பாபு, லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு,கலைச்செல்வம் அவர்களிடம் 20.08.2009 ஆம் தேதி புகார் மனு கொடுத்துள்ளார். அதன் பேரில் எதிரி திரு,சந்திரசேகரன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, எதிரி, புகார்தாரர் திரு.பாபுவிடமிருந்து லஞ்சப்பணம் ரு-10,000/-த்தை அவரது வீட்டில் கேட்டுப் பெற்றப்போது கையும் களவுமாக பிடிக்கபட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் எதிரி திரு,சந்திரசேகரன் அவர்கள் லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக திருவள்ளூர் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் 22.02.2012 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு பின்னர், சட்ட ஆலோசகர் திருமதி.அமுதா அவர்களின் வாதத்தாலும், மேற்படி வழக்கினை மாண்புமிகு திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி திரு.R.வேலரஸ் அவர்கள், வழக்கினை விசாரணை செய்து, இன்று 10.07.2023 ஆம் தேதி எதிரிக்கு ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7 -ன்படி எதிரிக்கு 4 வருடம் கடுங்காவல் தண்டனையும், மற்றும் அபராதம் ரூ.20,000/- மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(d) of PC Act-ற்கு 4 வருடம் கடுங்காவல தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.20,000/-ம் தண்டனையாக விதித்து தீர்ப்பளிக்கப்பட்டு, எதிரி திரு.சந்திரசேகரன் அவர்களை சென்னை மத்திய புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.